OS 178/2022 PW1- **அன்பரசன்**

**த/பெ சேகர் தேதி** 12.03.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** ;

எனது தாத்தா பெயர் கோடாங்கி பெரியகருப்பத்தேவர் என்றால் சரிதான்.கோடாங்கி பெரியகருப்பத்தேவரின் அம்மா பெயர் ஒச்சம்மாள். ஒச்சம்மாள் உடன்பிறந்தவர் அய்யத்தேவர் ஆவார். அய்யத்தேவரின் அக்கா மகன் தான் கோடாங்கி பெரியகருப்பத்தேவர் என்றால் சரிதான். கோடாங்கி பெரியகருப்பத்தேவரின் அப்பா பெயர் பெரியகருப்பத்தேவர் என்றால் சரிதான். மேற்படி அய்யத்தேவரின் மகன் தான் 1ம் பிரதிவாதி ராஜா என்றால் சரிதான். தாவா சொத்து என்பது நிலம் மற்றும் கிணறு ஆகும். தாவா சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். கோடாங்கி பெரியகருப்பத்தேவரின் அப்பாவுடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் ஒரே நபர் தான். கோடாங்கி பெரியகருப்பத்தேவரின் அப்பாவுடன் பிறந்தவர்கள் மூன்று நபர்கள் என்றாலும் அவர்கள் குப்பயாண்டித்தேவர், வீரத்தேவர், பெரியகருப்பத்தேவர் ஆகியோர்கள் என்றால் சரியல்ல. பெரியகருப்பத்தேவரின் அப்பா பெயர் வேடத்தேவர். குப்பயாண்டித்தேவர்,வீரத்தேவர், வேடத்தேவர் ஆகியோர் பங்காளிகளா என்றால் மேற்படி குப்பயாண்டித்தேவர்,வீரத்தேவர் ஆகியோர் யார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆதியில் குப்பயாண்டித்தேவர், வீரத்தேவர், பெரியகருப்பத்தேவர் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி மூன்று நபர்களும் கல்யாணிசெட்டியார் என்பவரிடம் கடன் வாங்கியிருந்தார்கள் என்றால் வேடத்தேவர் வாங்கியிருந்தார். கடன் கட்டாததால் கல்யாணிசெட்டியார் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது SC No. 616/1950 என்ற வழக்கை திருமங்கலம் முன்சீப் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்

என்றாள்ல சரிதான். அந்த வழக்கில் பணத்தை கட்ட வேண்டும் என்று தீர்ப்பானது என்றால் சரிதான். பணத்தை கட்டாததால் நிறைவேற்று மனு 258/1952 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி தாவா சொத்து ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டு மேற்படி அய்யத்தேவர் ஏலம் எடுத்தார் என்றால் சரிதான். தங்கச்சிக்காக ஏலம் எடுத்தார். கிரைய பத்திரம் அய்யத்தேவர் பெயரில் வழங்கப்பட்டது என்றாலும் கிரையத்திற்கு பின் அய்யத்தேவர் தான் சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அய்யத்தேவர் பெயரில் தாவா சொத்து பட்டா இருந்தது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை அய்யத்தேவர் 06.03.1953ல் ஒத்தி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி ஒத்தி பத்திரம் வா.சா.ஆ.8 ஆவணத்தில் மேறப்டிநிறைவேற்றுமனுவில் அய்யர்தேவர் ஏலத்தில் தாவா சொத்தை எடுத்ததை பற்றியும் தாவா சொத்தின் சுவாதீனத்தை தன்வசம் ஒப்படைப்பு செய்து சுவாதீனத்தில் உள்ள சொத்தை ஒத்தி வைப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்திலுள்ள வாசனங்களை உண்மையா பொய்யா என்றால் உண்மையான பத்திரம் தான். நாங்கள் தாக்கல் செய்த ஒத்தி ஆவணத்தில் அய்யர்தேவர் சுவாதீனத்தில் உள்ளதை சொல்லியிருப்பதால் அவருக்கு உரிமை இல்லை என்று நாங்கள் கட்சி செய்வது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி ஒத்தி பத்திரத்தை ஒத்தி வாங்கியவரிடமிருந்து எங்களது பாட்டனார் பெரியகருப்பத்தேவர் ஒத்தியை திருப்பி பெற்றுக்கொண்டார் அதில் அய்யத்தேவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். அய்யத்தேவர் மேற்படி ஒத்தியை மீட்டு அசல் பத்திரத்தை தன்வசம் வைத்திருந்தார் என்றும் அதை அய்யத்தேவர் உடன்பிறந்தவரான ஒச்சம்மாள் மற்றும் அவரது கணவர் பெரியகருப்பத்தேவர் மேற்படி அய்யத்தேவருக்கு தெரியாமல் மேற்படி

ஒத்தி பத்திரத்தை எடுத்து வந்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்திற்கு பின்னால் பத்திரத்தை மீட்டதாக நாங்களே எழுதி கொண்டோம் என்றாலும் அதில் நாகதேவரோ சாட்சியாக அய்யத்தேவரோ கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. அய்யத்தேவர் வைத்த ஒத்தியை எனது பாட்டனார் பெரியகருப்பத்தேவர் சட்டப்படி திருப்புவதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அய்யத்தேவரிடமிருந்து கிரையம் எதுவும் வாங்கினோமா என்றால் இல்லை. கிரையம் வாங்கினால் தான் சட்டப்படி உரிமைகோரமுடியும் ஒத்தி பத்திரத்தை மட்டும் வைத்துக்கொண்டு உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. 1984ல் வரை அய்யத்தேவர் பெயரில் தான் தாவா சொத்து பட்டா உள்ளது என்றால் சரியல்ல. 1985 பிறகு UDR சமயத்தில் எந்தவித விசாரணையும் ஆவணமும் இன்றி தவறுதலாக எங்கள் தரப்பில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அய்யத்தேவர் இறப்பிற்கு பிறகு அவரது வாரிசான 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இறப்பிற்கு பின் அவரது வாரிசுகளான 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது தாத்தாவின் அப்பா பெரியகருப்பத்தேவர் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா இருந்ததா என்றால் இல்லை. எனது தாத்தா கோடாங்கி பெரியகருப்பத்தேவர் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். மேற்படி பட்டா 1985ம் ஆண்டு வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி கோடாங்கி பெரியகருப்பத்தேவர் பெயரில்தவறுதலாக பட்டா உள்ளது என்றும் அதை மாற்றி தரவேண்டும் என்று 1ம்பிரதிவாதி RDO விடம் மனு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி மனு DROவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனு நிலுவையில் உள்ள போது இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால்

சரியல்ல. கோடாங்கி பெரியகருப்பத்தேவர் பெயரில் எந்தவித விசாரணையும் இன்றி UDR பட்டா வழங்கப்பட்டதால் தாவா சொத்தில் அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாடல் சரியல்ல. வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ.2 சிட்டாகள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் அதன்அடிப்படையில் நாங்கள் உரிமையும் கோர முடியாது என்றாலும் சரியல்ல. மூலப்பத்திரத்தின் அடிப்படையின் மட்டுமே உரிமை கோர முடியும் பட்டாவின் அடிப்படையில் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 தானசெட்டில்மெண்ட் பத்திரம் எனது தாத்தா எங்களுக்கு எழுதி கொடுத்தது, அப்போது எனது அப்பா உயிருடன் இல்லை. மேற்படி பத்திரத்தில் அய்யத்தேவர் வைத்த ஒத்தியை மீட்டு நாங்கள் அனுபவித்து வருவதாக எந்த வாசகமும் இடம்பெறவில்லை என்றால் பூர்வீக சொத்து என்று தான் போடப்பட்டுள்ளது. ஏற்கனவே அய்யத்தேவர் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் நாங்கள் பூர்வீக சொத்து என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து UDR பட்டா, சிட்டாவை பயன்படுத்தி மோசடியாக மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தி வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றாலும் சட்டப்படி ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் மேற்படி பத்திரம் பிரதிவாதிகளை எவ்விதத்திலும் கட்டுபடுத்தாது என்றாலும் சரியல்ல. அதை போல் வா.சா.ஆ.4 ஆவணம் மேற்படி அ.சா.3 போலி ஆவணத்தை வைத்து உற்பத்தி செய்திருப்பதால் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை தவர வேறு நிலங்கள் எனக்கு கிடையாது. கோடாங்கி பெரியகருப்பத்தேவர் பெயரில் உள்ள பட்டாவை பயன்படுத்தி வா.சா.ஆ.5 கிஸ்து ரசீதை மோசடியாக பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நானோ

எனது பாட்டனாரோ யாரும் அய்யத்தேவர் கிரையத்திற்கு பிறகு அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அய்யத்தேவர் கிரையம் பாத்தியம் பெற்று அவருக்கு பின்பு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு இதுவரை அவர்கள் அனுபவித்து வரும் சொத்து என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு ஆவணங்கள் மூலம் தாவா சொத்தில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. நாங்கள் கேட்க கூடிய பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் தாவா தள்ளுபடி செய்ய வேண்டியது என்றாலும் சரியல்ல.

S.d. Anbarasan
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.